DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:S.C.No.118/2025
Prosecution Witness P.W.3

Name : **திரு.திவாகர்**
Caste:

Father's Name :**திரு.**
Calling :

Village:
Religion :

Taluk :
Age:

3-ம் எதிரி ஆஜரில்லை, அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**நாள்: 23.02.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் கம்பம் கோம்பை ரோட்டில் குடியிருந்து வருகிறேன். நான் லாரி டிரைவராக தொழில் செய்து வருகிறேன். சபரிநாதன் என்பவரிடம் நான் டிரைவராக தொழில் செய்து வருகிறேன். கேரளாவிற்கு நாங்கள் மாடுகளை ஏற்றிச் செல்வோம். எனக்கு இறந்து போன முத்துக்குமரனை தெரியும் அவர் மாடுகள் ஏற்றி செல்லும் லாரிகள் வைத்திருந்தார். அதற்கு டிரைவர் அமர்த்தி இருந்தார். அதில் இந்த வழக்கின் முதல் எதிரி சதாம் உசேன் அவரிடம் டிரைவராக பணிபுரிந்து வந்தார். முதல் எதிரியை எனக்கு ஏற்கனவே பரிச்சயம். அவர்தான், இறந்து போன முத்துக்குமரனிடம் டிரைவராக வேலை செய்து வந்தார். சதாம் உசேனுக்கும், இறந்து போன முத்துக்குமரனுக்கும் வெகு நாட்களாக பழக்கம்.

2. முத்துக்குமரனுக்கு வண்டி வாகனங்கள் பற்றி அதிகமாக தெரியாது என்பதால் எல்லாமே சதாம் உசேன் தான் அந்த வண்டிகள் தொடர்பாக பார்த்து வந்தார். வரவு செலவுகளை சதாம் உசேன் பார்த்துக் கொள்வதாக சொன்ன நம்பிக்கையின் அடிப்படையில் முத்துக்குமரன் இந்த தொழிலில் இறங்கினார்

அவ்வாறு அந்த தொழிலில் இறங்கும்போது முத்துக்குமரன் அவரது மனைவி நகைகளை வைத்து லாரிகள் வாங்கி இந்த தொழிலில் இறங்கினார்.

3. பழைய லாரிகளாக பார்த்து, சதாம் உசேன் சொன்னதன் அடிப்படையில் லாரிகள் வாங்கினார். அவ்வாறு லாரிகள் வாங்கியது 2–3 வருடங்களுக்கு முன்பு லாரிகள் வாங்கி தொழில் செய்து வந்தார். அவ்வாறு மாடுகள் ஏற்றிச் சென்ற சதாம் உசேன் சரியாக பணத்தை முத்துக்குமரனிடம் கொடுக்காததால் கேட்ட போது மாற்று உரிமையாளர் சரியாக பணம் தரவில்லை என சொல்லி காரணம் சொல்லி வந்தார். எனவே மாடு ஏற்றும் இடத்திற்கு நேரடியாக முத்துக்குமரன் சென்று இது தொடர்பாக விசாரணை செய்து வந்துள்ளார். அங்கு விசாரித்தபோது தான் வண்டியின் உரிமையாளர் சதாம் உசேன் என அங்கு இருந்தவர்களிடம் சொல்லி இருந்த விபரம் தெரிய வந்துள்ளது.

4. வண்டி வாடகை பணமாக 30–35 ஆயிரம் ஒரு லோடிற்கு கிடைக்கும் அந்த வகையில் பணத்தை எல்லாம் சதாம் உசேனே வைத்திருந்தது தெரிய வந்தது. லோடு கொடுத்தவரிடம் இது பற்றி முத்துக்குமரன் கேட்டபோது எல்லா பணமும் சதாம் உசேனிடம் கொடுத்து விட்டதாக அவர்கள் தெரிவித்திருந்தார்கள். இது தொடர்பாக முத்துக்குமரனுக்கும், சதாம் உசேனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. கொஞ்ச நாட்கள் கழித்து பணத்தை தருவதாக சதாம் உசேன் முத்துக்குமரனிட் சொல்லி உள்ளார். சொல்லியவாறு பணம் தரவில்லை.. சதாம் உசேன் முத்துக்குமரனிடம், கௌதம் மூலமாக வண்டியை தர முடியாது என்றும் முடிந்ததை பார்த்துக் கொள் என்று சதாம் உசேன் முத்துக்குமரனிடம் தெரிவித்துள்ளார்.

5. அவ்வாறு வண்டியை ஓட்டினால் வண்டியில் கஞ்சா வைத்து நீ கஞ்சா கடத்தினாய் என்று வழக்கு தொடுப்பேன் என்று சதாம் உசேன் முத்துக்குமரனிடம் சொல்லி உள்ளார். மறுநாள் கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் இது சம்பந்தமாக முத்துக்குமரன் புகார் கொடுக்க, கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் இது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடந்தது. சதாம் உசேன்

தான் பணம் தர வேண்டும் என்று ஒப்புக்கொண்டார். அதன் பிறகு சதாம் உசேன் வேறு வண்டிக்கு சென்று விட்டார், அதன் பிறகு இருவருக்கும் பேச்சுவார்த்தை இல்லை. கார்த்திக் என்ற நண்பரின் ஒர்க்ஷாப்பில் வைத்து இறந்து போன முத்துக்குமரன் எதிரிகளை அழைத்து இதற்கு ஒரு முடிவு செய்வோம் என்று பேச்சுவார்த்தை நடத்தினார். தேதி எனக்கு தெரியாது வருடம், அந்த வருடம் 2024.

6. அப்பொழுது பிருந்தாதேவி முடிந்ததை பார்த்துக் கொள்ளுங்கள் என்றும், உன்னை என்ன செய்கிறேன் பார் என்று முத்துக்குமரனிடம் சொல்லி உள்ளார். இந்த விபரங்கள் முத்துக்குமரன் என்னிடம் சொல்லியுள்ளார். நான் அவர் வண்டியிலும் டிரைவராக செல்வதால் இது சம்பந்தமாக முத்துக்குமரன் என்னிடம் சொல்லி உள்ளார். டிரைவர் இல்லாத சமயங்களில் முத்துக்குமார் என்னை அழைப்பதால் நான் அவரிடம் ஆக்டிங் டிரைவராக சென்று உள்ளேன்.

7. இரண்டு நாட்கள் கழித்து நான் கேரளாவிற்கு லோடு ஏற்றி சென்றபோது 17 ஆம் தேதி இரவு 10.30 மணியளவில் சபரி என்னை லோடு ஏற்றி செல்லுமாறு சொன்னதன் பேரில் நான் அந்த கொட்டகைக்கு செல்ல வேண்டும் என வந்திருந்தேன். தூக்கம் வருவதை தடுப்பதற்காக நிஜாம் பாக்கு வாங்குவது வழக்கம் அப்போது கிருஷ்ணா பேக்கர்ஸ் என்ற அடகு கடைக்கு பக்கத்தில் நான் நின்று கொண்டிருக்கும்போது சதாம் உசேன் என்னை பார்த்து நிறுத்தி திரும்பி பார்த்துக் கொண்டே சென்றார்.

8. அதன் பிறகு நான் சபரிநாதன் கொட்டகைக்குச் சென்றேன், அங்கு லோடுமேன் யாரும் இல்லை, அப்போது மணி 01.30 மணியிருக்கும்.கொட்டகைக்கு எதிரில் சதாம் உசேன் மற்றும் 4ம் எதிரி ரித்திக்ரோஷன் ஆகிய இருவரும் இருசக்கர வாகனத்தில் பைபாஸ் அருகில் வண்டியை நிப்பாட்டி விட்டு முத்துக்குமார் உட்கார்ந்து இருக்கும் இடத்திற்கு இறங்கி சென்றார்கள்.. ஒரு 20 – 25 நிமிடங்கள் கழித்து மீண்டும் வண்டி எடுத்துக்கொண்டு பைபாஸ் வழியாக சென்றதை பார்த்தேன்.

9. நான் அவர்கள் நட்பாக பழகுவார்கள் என நினைத்துக் கொண்டு நான் பெரிது படுத்தவில்லை. அதன் பிறகு கன்னிச்சாமி டீக்கடை அருகில் லோடுமேன் யாராவது இருக்கிறார்களா என நான் பார்க்கச் சென்றேன், 5 நிமிடம் காத்திருந்தபோது லோடுமேன் யாரும் அங்கு வரவில்லை அதன் பிறகு ரித்திக் ரோஷன் மற்றும் சதாம் உசேன் இருவரும் பைக்கில் அந்த வழியாக வந்ததை பார்த்தேன். அது வடக்கு கம்பம் வடக்கு காவல் நிலையம் அருகில். ரித்திக்ரோஷனை வழியில் இறக்கி விட்டு சதாம் உசேன் கம்பம் வடக்கு காவல் நிலையத்திற்கு சென்றார், அப்போது மணி 02.15 மணி – 02.30 மணி இருக்கும். லோடுமேன் யாரும் வரவில்லை என்பதால் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

10. நான் வீட்டிற்குச் சென்று தூங்கி விட்டேன். அதன் பிறகு விஜயகுமார் என்ற டிரைவர் எனக்கு போன் செய்து, முத்துக்குமரன் இறந்து கிடப்பதாக எனக்கு தகவல் சொன்னார். நான் போய் பார்க்கும்போது அவர் ரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார். அவரது இடது மணிக்கட்டு, கழுத்து, நெற்றி ஆகிய இடங்களில் அவருக்கு காயங்கள் இருந்ததை பார்த்தேன், அதன்பிறகு உறவினர்கள் வந்தார்கள், பிரேதம் ஆம்புலன்ஸ்–ல் ஏற்றப்பட்டது. அதன் பிறகு நான் வந்து விட்டேன்.

11. சதாம் உசேன் லாரி வாடகை திருப்பி செலுத்தாமல் ஏமாற்றிய காரணத்தினால் அவர்களுக்கிடையே கருத்து வேறுபாடு காரணமாகவும், பிருந்தாவும் இரண்டு நாட்கள் கழித்து என்ன நடக்கிறது என்று பார் என்று சொன்ன தகவலை முத்துக்குமரன் சொல்லி நான் தெரிந்து கொண்டேன். சதாம் உசேன் மற்றும் ரித்திக் ரோஷன் ஆகியோர்கள் பயணம் செய்த இருசக்கர வாகனம் பல்சர் பைக் சா.பொ.5, தற்போது என்னிடம் காண்பிக்க கூடிய வண்டி உத்தமபாளையம் காவல் நிலையத்திலிருந்து வீடியோ கான்பரன்ஸ் மூலம் காட்டப்பட்டு சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்பட்டது. இது சம்பந்தமாக உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் முன்னிலையில் நான் சாட்சியம் அளித்துள்ளேன். போலிசார் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை

செய்தார்கள். நான் நீதித்துறை நடுவர் முன்னிலையில் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள எனது கையெழுத்து அ.சா.ஆ.4.

**<u>எதிரிகள் 1 முதல் 3 தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. எனது அப்பா பெயர் கண்ணன். கர்ணன் மகன் திவாகர் என்றால் நான் கிடையாது என்றால் சரிதான். எனது தந்தை பெயர் கண்ணன் என்று தான் நான் போலீஸ் விசாரணை சொல்லி உள்ளேன் ஆனால் அவர்கள் தான் தவறாக கர்ணன் என தட்டச்சு செய்துள்ளார்கள். எத்தனை முறை வாக்குவாதம் நடந்தது எங்கெங்கு வைத்து வாக்குவாதம் நடந்தது என்று விவரம் தெரியுமா என்றால் தெரியும். கேரளாவில் ஆக்டிங் டிரைவராக சென்றபோது அங்கு வைத்து என்னிடம் முத்துக்குமரன் சொல்லியுள்ளார். நான் முத்துக் குமரனை அங்கு வைத்து சந்தித்தபோது அவர் என்னிடம் இது பற்றி சொல்லியுள்ளார்.. முத்துக்குமரன் என்பவர் எனது அப்பாவின் உடன் பிறந்த அண்ணன் மகன் என்றால் சரிதான்.

2. தகராறு நடந்ததும் நேரடியாக வைத்துப் பேசப்பட்டது என்று நான் சொல்லி உள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் என்ன பேசப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். யார், யார் என்ன பணம் வாங்கினார்கள், என்ன வரவு, செலவு என்ற விபரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த ஒர்க் ஷாப்பிற்கும் இடையில் 10– 20 மீட்டர் தான் இடைவெளி இருக்கும் என்றால் சரிதான். எப்போதும் இரவு பகலாக அந்த இடத்தில் மாடுகள் இறக்கி ஏற்றுவது வழக்கம் என்றால் சரிதான்.

3. இரவு நேரங்களில் அங்கு லோடு ஏற்றி செல்லும் நபர்களும் முத்துக்குமரனும் உட்கார்ந்து மது அருந்துவது வழக்கம் என்றால் எப்போதாவது அவ்வாறு மது அருந்துவார்கள். அவ்வாறு லோடு ஏற்ற வரும் வண்டிகள் அதிகாலை 2 மணி, 3 மணி, 4 மணி, 5 மணிக்கு வரும் என்றால் சரிதான். சதாசிவம் என்பவருக்கு அந்த இடம் பாத்தியமானது என்றால் சரிதான், அதன்

அருகில் டீக்கடையும் உள்ளது என்றால் சரிதான். கார்த்திக் என்பவர் அந்த இடத்தை லீசுக்கு எடுத்து கொட்டகைக்கும், டீக்கடைக்கும் வாடகைக்கு விட்டுள்ளார். சபரி தோட்டம், அண்ணாதுரை தோட்டம் மற்றும் ஒர்க் ஷாப் ஆகிய இடங்களில் காவலாளிகள் எப்பொழுதும் இருப்பார்கள் என்றால் சரிதான்.

4. ஒரு சில நேரங்களில் இருக்க மாட்டார்கள். டீக்கடையின் உரிமையாளரின் அப்பா சுருளி மாயன் என்பவரும் டீக்கடையில் காவலாளியாக படுத்துக் கொள்வார் என்றால் சரிதான். ஒரு சில நேரங்களில் உடல்நிலை சரியில்லை என்றால் வீட்டிற்கு செல்வார், அவர் எப்பொழுது லீவு போட்டார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஈஸ்வரியின் மகன் பெயர் ருத்ரன் என்றால் சரிதான். பிருந்தாவிற்கும், ருத்ரனுக்கும் தொடர்பு இருந்து வந்ததாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நான் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றும், பிருந்தாவின் மகளுக்கும் ஈஸ்வரி என்பவரது மகனுக்கும் தான் சம்பந்தம் பேசினார்கள் என்றால் சரியல்ல.

5. பிருந்தாவுக்கும், ருத்ரனுக்கும் தான் பழக்கம் இருந்தது அதன் பிறகு ஊருக்குள் இது பற்றி பேசி வந்த காரணத்தினால் தனது மகளைக் கட்டிக் கொடுப்பதாக பிருந்தா சொல்லியிருந்தார். பிருந்தா இரண்டு குழந்தைகளுடன் கம்பத்தில் இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும். பிருந்தாவிற்கும், ருத்திரனுக்கும் தொடர்பு இருந்த பொழுது கள்ளர் பள்ளிக்கு மேல் புறம் பேங்கர்ஸ் பக்கம் அவர்கள் வழக்கமாக சந்திப்பார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும், எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நான் பார்த்திருக்கிறேன்.

6. இது சம்பந்தமாக போலீசார் என்னை கேட்கவில்லை என்பதால் நான் அவர்களிடம் அது பற்றி சொல்லவில்லை. நான் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. ஈஸ்வரியும் பிருந்தாவும் உடன் பிறந்த சகோதரிகள் கிடையாது என்றால் சரிதான். தங்கமலை வீட்டில் ஈஸ்வரி குடியிருந்து வந்தார். இந்த சம்பவம் தொடர்பாக எனக்கு நேரடியாக தெரியாது

என்றால் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை, ஆனால் 1ம் எதிரியும், 4ம் எதிரியும் ஒன்றாக இருசக்கர வாகனத்தில் சென்ற விபரத்தை பார்த்தேன். நான் அவர்களைபார்த்த பிறகும் நான் சம்பவ இடத்திற்கு சென்று போய் ஏதேனும் நடந்ததா என்று பார்த்தேன் என்றால் அவ்வாறு பார்க்கவில்லை.

7. எனது சொந்த பெரியப்பா மகன் என்பதால் கண்டிப்பாக நான் அவ்வாறு எதிரிகளை பார்த்திருந்தால் நான் சம்பவத்திற்கு சென்று எச்சரித்து பார்த்திருப்பேன் என்றால் சரியல்ல பேச்சுவார்த்தையில் சதாம் உசேனுக்கு முத்துக்குமரனுக்கும் சமாதானம் ஏற்பட்டு பணத்தை தந்து விடுகிறேன் என சதாம் உசேன் சொன்ன காரணத்தினால் நான் அவரை சந்தேகிக்கவில்லை. எனவே நான் சம்பவயிடத்திற்கு உடனே ஓடிச்சென்று பார்க்கவில்லை. .

8. நான் சம்பவ இடத்திற்கு 10 மீட்டர் தொலைவில் இருந்ததால் சம்பவம் என்ன நடந்திருந்தாலும் என கேட்டிருக்கும் என்றால் சரியல்ல. நான் லாரிக்குள் உட்கார்ந்து இருந்ததால் எனக்கு அங்கிருந்து சம்பவ இடம் தெரியாது எனக்கு சத்தமும் கேட்கவில்லை. இந்த விவரங்களை போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் போலீசார் அது பற்றி என்னிடம் கேட்கவில்லை என்பதால் நான் சொல்லவில்லை. சபரி கொட்டகையில் சுமார் ஐந்து நாய்களுக்கு மேல் வளர்க்கிறார்கள் என்றால் சரிதான். அந்த நாய்கள் ஆக்சிடென்ட் ஆகி இறந்து விடும் என்ற காரணத்தினால் அவற்றை இரவு நேரங்களில் நாங்கள் கூண்டுக்குள் அடைத்து வைத்து விடுவோம்.

9. சுமார் 15 மாடுகளை அன்றைய தினம் நான் ஏற்றுவதற்காக நான் அன்றைய தினம் வந்திருந்தேன். 15 மாடுகளை ஏற்ற வேண்டும் என்றால் எனக்கு உதவிக்கு குறைந்தபட்சம் 4 நபர்களாவது வந்திருக்க வேண்டும் என்றும், நான் மட்டும் வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. டிரைவர் மற்றும் லோடுமேன் மட்டும்தான் வருவார்கள் வண்டி ஏற்ற வேறு யாரும் வரமாட்டார்கள். நான் அழைத்தபோது லோடுமேன் யாரும் கிடைக்காததால் நான் அந்த இடத்தில் காத்துக் கொண்டிருந்தேன். அன்றைய தினம் சபரி

கொட்டகையில் காவலாளி இல்லை. காவலாளிகள் யாரும் அங்கு நிரந்தரமாக இருக்க மாட்டார்கள், ஒரு மாதம் இருப்பார்கள், ஒரு மாதம் இருக்க மாட்டார்கள்.

10. நான் அங்கு டிரைவராக இருககிறேன் என்பதால் அங்கு காவலாளி இல்லை என்ற விபரம் எனக்கு தெரியும். வழக்குக்காக நான் டிரைவராக பணிபுரிவதாக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. கிருஷ்ணா பேங்கில் அடகு கடையில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் சரிதான். எனது அண்ணன் முத்துக்குமரன் அந்த கொட்டகையில் இருந்தாரா என்று எனக்கு தெரியுமா என்றால் அவர் வழக்கமாக அங்கு தான் இருப்பார் அவர் 11.30 – 12.00 மணிக்கு மேல் அங்கு வழக்கமாக வருவார். எப்பொழுதும் இரவு நேரங்களில் பெயிண்ட் அடிப்பவர்களும் அங்கே வேலை செய்வார்கள் என்றால் சரியல்ல.

11. அன்றைய தினம் அவர்கள் யாரும் வரவில்லை. தகவல் சொன்ன விஜயகுமார் எனது நண்பர் தான் என்றால் சரிதான். அவர் என்னை அழைத்தபோது நள்ளிரவு 2.45 மணி இருக்கும். முதலில் அவர் யாருக்கு தகவல் சொன்னார் என்ற விவரம் எனக்கு தெரியாது அவர் எனக்கு தகவல் சொன்னபொழுது நள்ளிரவு 2.45 மணி இருக்கும். படாதோஸ்த் என்ற நான்கு சக்கர வாகனத்தை அவர் அன்றைய தினம் ஓட்டி வந்தார். நம்பியார் லாரி ஒன்று சம்பவ இடத்திற்கு பக்கத்தில் நின்றிருந்தது.

12. நான் கூறுவது போல் சம்பவ இடத்திற்கு பக்கத்தில் எதுவுமே இல்லை என்றும், நான் உண்மையிலேயே சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் டீக்கடைக்கு சென்றபோது டீக்கடை அடைத்திருந்தது அங்கு யாரும் இல்லை. டீக்கடைக்கு எப்போதும் 4 – 5 பேர் வருவார்கள் என்றால் சரியல்ல. டீக்கடை அடைத்ததால் யாரும் அங்கு வரவில்லை, ஒரு சில நேரம் டீக்கடை திறந்து இருக்கும் நான் அந்த இடத்திற்கு டீ குடிக்க செல்லவில்லை அந்த டீக்கடையிலும், சுற்றியுள்ள கடைகளிலும் சிசிடிவி கேமராக்கள் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் சம்பவயிடத்திற்கு சென்ற பொழுது அதிகாலை 3.00 மணி இருக்கும்.

13. நான் வந்தபோது போலிசார் வந்துவிட்டார்கள். அங்கு புகார்தாரர் புகார் ஏதும் கொடுத்தாரா என்று நான் கவனிக்கவில்லை. அங்கு சுமார் 10–20 நபர்கள் கூடி இருந்தார்கள் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. எனது அண்ணன் பைனான்ஸ் தொழில் செய்து வந்தார் என்றால் அவர் அப்பா தான் பைனான்ஸ் தொழில் செஞ்சார் இவர் செய்யவில்லை.

14. எனது அண்ணன் பல இடங்களில் பைனான்ஸ் தொழில் செய்து பகை உணர்வை வளர்த்து வைத்திருந்தார் என்றால் சரியல்ல. முத்துக்குமரன், யாரும் பகை கிடையாது, அவர் அப்பா தான் பைனான்ஸ் தொழில் செய்தார். எனக்கும், முத்துக்குமரன் குடும்பத்திற்கும் சொத்து சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் சரியல்ல. எனக்கும், முத்துக்குமாரனுக்கும் பிரச்சினை இருந்ததென்றும், அவர் என்னை டிரைவராக வைத்ததில்லை என்றால் சரியல்ல. நான் ஆக்டிங் டிரைவர் ஆக சென்றிருக்கிறேன்.

<u>4–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

15. சபரிநாதன் செட்டில் ரோட்டை பார்த்தவாறு ஒரு சிசிடிவி கேமராவும், மாட்டு கொட்டகை பார்த்து ஒரு சிசிடிவி கேமரா உள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த கேமரா இயங்கவில்லை என்றும் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. கேமரா பொதுவாக இயங்காது அது எப்பொழுது இயங்குகிறது என்று எனக்கு தெரியாது. என்னிடம் அவர் சொல்லி நான் ஒரிரு முறை அந்த கேமரா ரீசார்ஜ் செய்து கொடுத்துள்ளேன் இடையில் என்னிடம் அவர் சொல்லாததால் அந்த கேமரா இயங்கவில்லை என்ற விவரம் எனக்கு தெரியும். அந்த கோம்பை ரோடு ஜங்ஷன்–ல் வெளிச்சம் எதுவும் கிடையாது.

16. கம்பம் பைபாஸில் கீழ் வழியாக திரும்பி கம்பத்திற்குள் வரும் பொழுது பாண்டியன் ஓட்டல், பாரத் பெட்ரோல் பங்க், இந்தியன் பெட்ரோல் பங்க், RMTC

டிப்போ ஆகியவைகளை கடந்து தான் செல்ல வேண்டுமென்றால் சரிதான். அந்த இடங்கள் வழியில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்றால் எனக்கு சரியாக அது பற்றி தெரியாது. 5–6 வருடங்களாக நான் டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். ஓட்டுநர் உரிமத்தை போலீசார் என்னை விசாரிக்கும் பொழுது நான் சமர்ப்பித்து உள்ளேனா என்றால் நான் அவர்களிடம் சமர்ப்பிக்கவில்லை. எங்கள் வாகனத்தில் டீசல் நிரப்புவதற்கு பெட்ரோல் பங்குக்கு செல்வோம் என்றால் சரிதான். ஒவ்வொரு பெட்ரோல் பங்கிலும் கேமராக்கள் பொருத்தப்பட்டிருக்கும் என்றால் சரிதான்.

17. அந்த வழியாக என்னென்ன வாகனங்கள் செல்கிறது என்று பொதுவாக பதிவாகும் என்றால் சரிதான். நான் சம்பவதினத்தன்று நான் டீசல் போடவே செல்லவில்லை. நான் கண்ணிச்சாமி டீக்கடைக்கு வடக்கே வடக்கு புறம் மெயின் ரோட்டில் பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஹெச்டிஎஃப்சி பேங்க், வங்கி அதன் ஏடிஎம் உள்ளது என்றால் சரிதான் பாதுகாப்புக்காக வங்கிகளும் ஏடிஎம்களிலும் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

18. அந்த வழியாக போகும் நபர்கள் அந்த கேமராவில் பதிவாகும் என்றால் எந்தெந்த கேமராக்கள் பயன்பாட்டில் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது நான் அந்த கேமராக்களை ஆய்வு செய்யவில்லை என்பதால் அது பற்றிய விவரம் எனக்கு தெரியாது. கன்னிச்சாமி கடை முக்கிலும், கே.கே.பட்டி முக்கிலும் கண்காணிப்பதற்காக சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கேமராவில் வருபவர்கள் போபவர்கள் விவரம் பதிவாகும் என்றால் சரிதான். கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரூபனா 18 வயது பூர்த்தியாக மைனர் என்றால் சரிதான்.

19. நான் போலிசார் விசாரணையிலும், உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் முன்னிலையில் கொடுத்த வாக்குமூலத்திற்கு முரணாக தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல உத்தம்பாளையம் நீதித்துறை நடுவர்

முன்னிலையில் அளித்த சாட்சிக்கு பிறகு தற்போது போலீசாரும், புகார்தாரரும் சொல்லிக் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

20. நான் பார்த்த விபரங்களை சாட்சியாக அளிக்கிறேன். இந்த வழக்கில் சாட்சிகளாக உள்ள விஜயகுமார், கார்த்திக், தினேஷ், கௌதம் எல்லோரும் டிரைவராக வேலை பார்த்தோம் என்றால் சரிதான். நண்பர்கள், உறவினர்கள் கிடையாது. அஜய் மற்றும் விஜய் டிரைவர் என்றால் சரியல்ல, உறவினர் கிடையாது, பழக்கம் தான். மேற்கண்ட சாட்சிகள் அ.சா1 உறவினர்கள் மற்றும் பழக்கமானவர்கள் என்றால் சரிதான்.

21. நான் சொன்ன இரவு நேரம் என்பது அமைதியாக இருக்கும் என்றால் சரிதான். பொதுவாக நாய் குலைக்கும் சத்தமோ ஒரு நபர் கத்தும் சத்தமோ கேட்கும் என்றால் சரிதான். ஆனால் நான் வாகனத்திற்குள் உட்கார்ந்து இருந்ததால் கண்ணாடியை அடைத்து இருந்ததால் எனக்கு கேட்கவில்லை. சபரிநாதன் கொட்டகையில் அதன் தாழ்வாரம் தெற்கு பார்த்து தான் அமைந்துள்ளது என்றால் சரிதான். அதன் வடக்கு பக்கம் மறைவாக மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தபோது அந்த சமயம் அது மறைக்கப்படவில்லை, தற்பொழுது தான் அது மறைக்கப்பட்டுள்ளது.

22. அந்த இடத்தில் தற்பொழுது ஹோட்டல் வந்துள்ளது. சம்பவ சமயத்தில் மறைக்கப்பட்டிருந்தது என்றும் வழக்கு விபரங்களை தெரிந்து கொண்டு நான் பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. சபரிநாதன் செட்டிலிருந்து சம்பவயிடத்தை பார்க்க முடியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் அந்த ஒர்க் ஷாப்பிற்கு ஈபி கனெக்சன் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, EB கனெக்சன் உள்ளது , EB கனெக்சன் கிடையாதென்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்ச ரியல்ல. ஒர்க் ஷாப்பை ஒட்டி டீக்கடை ஒன்று வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த டீக்கடை வழக்கம் போல 4.00 – 5.00 மணிக்கு திறந்து விடுவார்கள் என்றால் சரிதான். டீக்கடைக்காரர் சுகம்

இல்லாதவர் என்பதால் காலை 6.00 மணி 7.00 மணிக்கு மேல் தான் கடையை அவர் திறப்பார்.

23. வழக்கம் போல அவர் கடையை திறந்து விடுவார் என்றும், நான் பொய்யாக அவர் 6.00 – 7.00 மணிக்கு தான் திறப்பார் என்று குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. நானே அவரை இரண்டு, மூன்று முறை பிக்சில் இருந்து காப்பாற்றி உள்ளேன். எனவே குளிர்காலத்தில் அவர் அதிகாலை வரமாட்டார். நான் சொல்லும் விவரங்கள் அனைத்து உண்மையாக இருந்திருந்தால் போலீசார் விசாரணையில் சொல்லி இருப்பேன் என்றால் சரியல்ல.

24. நீதிமன்றத்தில் நீங்கள் கேட்கும் கேள்விகளை போலீசார் என்னிடம் கேட்காதால் அது பற்றி சொல்லவில்லை. எனக்கு தெரிந்த விவரங்களை சொல்லிவிடலாமே என்று நான் தற்போது நீதிமன்றத்தில் குறிப்பிடுகிறேன்.
மாடு ஏற்றும் லோடுமேன் மாடு மட்டும் தான் ஏற்றுவார்கள் மூட்டை ஏற்ற மாட்டார்கள் என்றால் சரிதான். நான் சொன்ன கந்தசாமி கடை முன்பு மூட்டை ஏற்றும் லோடுமேன் மட்டும்தான் வருவார்கள் என்றால் சரியல்ல, மாடு ஏற்றும் லோடுமேனும் வருவார்கள்.

25. மாடு ஏற்றும் லோடுமேன் அங்கு வருவார்கள் என வழக்குக்காக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல, டிரைவர் வேலைக்காக நான் அங்கு தான் நிற்பேன். இருசக்கர வாகனத்தின் பின்பகுதியில் நம்பர் பிளேட்டில் 7 என்ற எண் இல்லை என்றால் சரிதான். முன்பக்கத்தில் உள்ளது. அந்த வண்டியின் பின்பக்கம் ஸ்டார் போட்டு ஒரு ரவுண்டு உள்ளதை நான் பார்த்தேன் வண்டி நம்பரை நான் அந்த சமயம் கவனிக்கவில்லை. அவ்வாறு வண்டியில் சக்கர வடிவில் ஒரு குறி இருந்தது என்ற விவரத்தை நான் போலீசார் விசாரணை சொல்லவில்லை என்றால் அவர்கள் இதுபற்றிய என்னிடம் கேட்காதால் நான் சொல்லவில்லை.

26. வண்டி நம்பர் குறித்தோ, அதில் என்ன அடையாளம் இருந்தது என்றோ போலீசார் என்னை கேட்கவில்லை என்பதால் நான் சொல்லவில்லை.

நான் கருப்பு நிற வண்டி என்று மட்டும் சொல்லி உள்ளேன். நான் சொல்வது போல் உண்மையான கருப்பு நிற வாகனம் அல்ல என்றால் சரியல்ல. வழக்கின் வாகனத்தின் விவரங்களை போலீசார் சொல்லிக் கொடுத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பைபாஸ்–ல் பொதுவாக சிசிடிவி கேமராக்கள் இருக்கும் என்றால் பாளையம் வரை கேமராக்கள் இருக்கும் என்றால் சரிதான், ஆனால் நான் அதை கவனிக்கவில்லை.

27. நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில் வைத்து எதிரிகளை இருசக்கர வாகனத்தில் பார்க்கவில்லை என்றும், அவ்வாறு அவர்கள் போயிருந்தால் சிசிடிவி கேமராவில் பதிவாகி இருக்கும் என்றால் சரியல்ல. அதனால் தான் எந்த சிசிடிவி கேமராவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நகைக்கடைக்கு எதிரில் தான் ரித்திக் ரோஷன் வீடு உள்ளது என்றால் அவரது பாட்டி வீடு அங்கு உள்ளது அவர் வீடு அங்கு கிடையாது.

28. அந்த வழியாக எதிரிகள் சென்று இருந்தால் அந்த அடகு கடையில் உள்ள சிசிடிவி கேமராவில் பதிவாகி இருக்கும் என்றால் பதிவாகி இருக்கலாம். நான் கூறுவது போல் கோம்பை ரோடு மார்க்கமாக எதிரிகள் செல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு முன்பும் கன்னிசாமி கடை முன்பு எதிரிகளை பார்த்ததாக பொய் என்றால் சரியல்ல. வழக்கில் காயம்பட்டு இறந்து போனவர் எனது உறவினர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு 4–ம் எதிரி 4–எதிரி ரித்திக் ரோஷன் மற்றும் 2–ம் எதிரி பிருந்தாவும் எனக்கு உறவினர் தான் அவர்களும் எனக்கு வேண்டப்பட்டவர்கள் தான், அவர்களுக்கும் எனக்கும் எந்த முன் விரோதமும் கிடையாது . 4–ம் எதிரி இறந்து போன முத்துக்குமரனிடம் பணம் வங்க வில்லை என்றால் சரிதான். 4–ம் எதிரி இறந்து போன முத்துக்குமரனிடம் பணம் வாங்கவில்லை என்றால் சரிதான்.

அவருக்கும் இறந்து போனவருக்கும் முன்விரோதம் இல்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை - இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.23 19:25:09 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.